**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 61/2022 PW . 5**

**பெயர் : பிரம்மன்** **தந்தை/கணவர் பெயர்: மண்ணமுடையான்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2025

---

**(எதிரி ஆஜர்).**

**23.01.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது சடையன்பட்டியில் குடியிருக்கிறேன். இருசக்கரவாகன பழுதுபார்க்கும் வேலை செய்கிறேன். அ.சா.1யை தெரியும். 16.09.2021ம்தேதி தட்டாமடை பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்திற்கு நான், எனது அண்ணன் வெள்ளைச்சாமி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அ.சா.1, 2 ஆகியோர் எங்களுக்கு முன்னால் இருசக்கர வண்டியில் மேற்படி கும்பாபிஷேகத்திற்கு சென்று கொண்டிருந்தார்கள். கரிசல்பட்டி அம்மன் கோயில் அருகே உள்ள வளைவு ரோட்டில் சென்ற போது எதிரே துவரங்குறிச்சி – பொன்னமராவதிக்கு சென்ற அரசு பேருந்து மோதி அ.சா.1,2 சென்ற வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அ.சா.2க்கு காலில் காயம் ஏற்பட்டது. அ.சா.1க்கு கண்ணில் காயம் ஏற்பட்டது. அரசு பேருந்து ரோட்டின் வலதுபுறம் ஏறி வந்ததால் விபத்து ஏற்பட்டது. அரசு பேருந்தின் ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். (சாட்சி தற்போது எதிரியை அடையாளம் காட்டுகிறார்). காயம்பட்ட இருவரையும் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனைக்கு சென்றார்கள். 1மாதம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. நந்தக்குமார், பொன்னையா ஆகியோர் எனக்கு அண்ணன் ஆவார். சம்பவ இடத்திற்கு 5 நிமிடத்தில் வந்து விட்டோம். இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதவில்லை. பேருந்தின் டீசல் டேங்கில் அ.சா.1 ஓட்டி வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடன் மற்ற யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை. சம்பவத்தன்று சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அ.சா.1ன் இருசக்கர வாகனம் அதிவேகமாக சென்று எதிரி ஓட்டி வந்த பேருந்தின் டீசல் டேங்கில் மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.